## ஆகஸ்ட் - 20

**"நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்."**
**- அப் 17 : 23.**

அப்போஸ்தலனுடைய செயல்படும்முறை பின்பற்றுவதற்குத் தகுதியுள்ளதாயிருக்கிறது. எல்லா ஞானமுள்ள ஜனங்களும் புதுமையை நம்பாதிருக்கிறார்கள். அவர்கள் மதிப்பு மிக்கதாயிருக்கிறதை வெகுகாலமாகவே இருக்கிறதென்றுச் சொல்ல விரும்புகிறார்கள். நாமும், அப்போஸ்தலனைப்போல, உண்மையான சுவிசேஷம் ஒரு புது வேத சாஸ்திரம் அல்ல என்றும் ஆனால் அந்த பழைய வேத சாஸ்திரம் தான் என்றும், ஒரு புது சுவிசேஷம் அல்ல என்றும் ஆனால் ஆபிரகாமுக்கு முன்னறிவிக்கப்பட்டதும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயும் அவருடைய எல்லா அப்போஸ்தலராலேயும் சொல்லப்பட்டதுமான அந்த பழைய சுவிசேஷம் என்றும் மற்றவர்களுக்குக் காட்ட முயற்சி செய்ய வேண்டும். "இருண்ட யுகங்களை" ஆரம்பமாகக் கொண்டதும் இந்நாளில் வழக்கத்திலிருக்கிறதுமான அந்தத் தப்பான உபதேசங்களை நாம் நீரூபிப்பதற்கு சமமாக பிழையான ஒரு புதுக்கோட்பாட்டை நாம் உருவாக்கவில்லை என்றும், ஆனால், நாம் இருண்ட யுகங்களின் தப்பான உபதேசங்களை கைவிட்டு விட்டு, கர்த்தராலும் அவருடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளான அப்போஸ்தலராலும் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தின் முதல் தத்துவங்களுக்கும், கட்டளைகளுக்கும், போதனைகளுக்கும் திருப்பிச் சென்றிருக்கிறோம் என்றும் மற்றவர்களுக்குக் காண்பிக்க வேண்டும்.

**- Z ’03, 29(R 3138)**

சமயத்திற்கேற்ற சாதுரியத்தைவிட மிகச் சில காரியங்களே தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு பெரிய விளைவுகளை உண்டாக்குகின்றன. ஒருவர் எப்பொழுதும் மிகவும் திறமையுள்ளவராக இருக்கலாம். ஆனால், சமயத்திற்கேற்ற சாதுரியம் அவரிடம் இல்லை என்றால், நன்மையடைய அவர் பிரயோகிக்கிற செல்வாக்கு கொஞ்சம்தான். அப்பொழுது, சமயத்திற்கேற்ற சாதுரியத்தையுடையவர்கள் சிறிய திறமையை கொண்டு அதிக திறமையையுடைய ஆனால் சாதுரியமில்லாத மனிதரைவிட பொதுவாக மிகப்பெரிய விளைவுகளை உண்டாக்குகிறார்கள். சமயத்திற்கேற்ற பெரிய சாதுரியமாகும். சிறந்தத்திறமையும் ஒன்று சேர்ந்து இருப்பதற்கு பவுல் ஒரு உதாரணமாக விளங்குகிறார். ஆகையால், அவர் மிக மகத்தான பலன்களை கொடுக்கக்கூடிய காரியங்களை செய்தார். சமயத்திற்கேற்ற சாதுரியத்தோடும், திறமையோடும் அவர் அத்தேனே பட்டணத்தாருடன் நடந்து கொண்டார். திறமையிருந்தும் சமயத்திற்கேற்ற சாதுரியமில்லாதிருந்தாரானால் தன்னை கொலைச்செய்ய அவர்களை தூண்டியிருப்பதை தவிர அவர்களிடம் வேறு ஒன்றுமே நிறைவேற்றியிருக்க மாட்டார். அப்படி தூண்டியிருப்பாரானால் அதன் மூலமாக அப்பொழுதிருந்த நிலைமைக்கு ஏற்றவாறு அவருடைய மரணத்தைக் கேட்கும் சட்டத்தை அவர்கள் அமுலுக்கு கொண்டுவந்திருப்பார்கள். அவரைப்போல நாம் நமது திறமைகளை உபயோகிப்பது நல்லது. நமது சமயத்திற்கேற்ற சாதுரியத்தை உபயோகிப்பது அதைவிட மிகவும் நல்லது. ஆனால் திறமையையும் சமயத்திற்கேற்ற சாதுரியத்தையும் ஒன்று சேர்த்து உபயோகிப்பது எல்லாவற்றையும் விட மிகவும் நல்லது. அதனால் மிகவும் உத்தமமான பலன்களை பெறலாம்.

**- P ’36, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

நீதி 15:1; 25:15; 1கொரி 9:19-22; 2கொரி 12:6; நியா 8:1-3; 1சாமு 10:27; 11:7, 12-15; 25:18-37; 2சாமு 3:28-37; 20:16-22; 1ராஜா 3:24-28; அப் 16:3; பிலி 1:10-22; அப் 23:6-10; 21:20-25.

**கோபுர வாசிப்பு :** Z ’03, 27 (R 3138)

**வினாக்கள் :** இந்த வாரத்தில் சத்தியத்தை அறிவிப்பதில் நான் சமயோஜித புத்திசாதுரியமுள்ளவனாயிருந்தேனா? ஏன் எந்தச் சந்தர்ப்பங்களில்? உதவியானவை எவை? இடையூறாயிருந்தவை எவை? பலாபலன்கள் எவை?